செ.வெ.எண்: 668 நாள்: 20.11.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தை கண் பார்வை குறைபாடு இல்லாத மாவட்டமாக மாற்ற நடவடிக்கை.**

**ஒளிமயமான வாழ்வு முகாமினை துவக்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (20.11.2020) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை மற்றும் CVB அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற கண் பரிசோதனைக்கான ஒளிமயமான வாழ்வு முகாமினை துவக்கி வைத்தார். இம்முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் இம்முகாமில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தை கண்பார்வை குறைபாடு இல்லாத மாவட்டமாக மாற்றும் வகையில் தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை மற்றும் CVB அறக்கட்டளை இணைந்து கண் பரிசோதனைக்கான ஒளிமயமான வாழ்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், இராப்பூசல், இடையப்பட்டி மற்றும் எண்ணை ஊராட்சி மேலப்பட்டி ஆகிய கிராமங்களில் ஒளிமயமான வாழ்வு முகாம் துவக்கி வைத்து பார்வையிடப்பட்டது.

தினமும் இம்முகாமினை மூன்று ஊராட்சி பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர், அரசு மருத்துவமனை சிறப்பு கண் மருத்துவர், மருத்துவம் சார் கண் மருத்துவ உதவியாளர், கிராம சுகாதார செவிலியர், சுகாதார ஆய்வாளர்கள், முதலமைச்சர் மருத்துவக்காப்பீட்டுத்

திட்டத்தின் கீழ் உள்ள தனியார் மருத்துவமனைகள் மற்றும் CVB அறக்கட்டளை பணியாளர்கள் ஆகியோர் இணைந்து நடத்த உள்ளனர்.

இம்முகாமில் அனைத்து வயதினருக்கும் கண் பரிசோதனை மேற்கொண்டு கண் பார்வை குறைபாடு உள்ளவர்களை கண்டறிந்து அறுவை சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு உரிய மேல் சிசிச்சைக்கு பரிந்துரைக்கப்பட உள்ளதுடன் மூக்கு கண்ணாடி தேவைப்படும் பார்வை குறைபாடு உள்ள அனைவருக்கும் CVB அறக்கட்டளையின் மூலம் மூக்கு கண்ணாடி விலையில்லாமல் வழங்கப்பட உள்ளது.

இதேபோன்று இந்த ஒளிமயமான வாழ்வு முகாம் புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் படிப்படியாக நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதன் பயனாக புதுக்கோட்டை மாவட்டம் கண் பார்வை குறைபாடு இல்லாத மாவட்டமாக மாற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் அன்னவாசல் ஒன்றியக்குழுத்தலைவர் வி.ராமசாமி, பொது சுகாதாரத் துணை இயக்குநர் மரு.கலைவாணி, மருத்துவர்கள், CVB அறக்கட்டளை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**